# தூதன்

தூதன்-29 ஜூலை - 2020 தூது-7

ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். மத்தேயு 7:24




தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 03 |
| உதவி ஆயரம்மா மடல் – ஃபுஜைரா | 05 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 07 |
| உதவி ஆயரம்மா மடல் – இராஸ் அல் கைமா | 09 |
| செயலர் மடல் | 11 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 13 |
| அறிந்து கொள்வோம் | 14 |
| திருச்சபை ஜெபநாள் | 16 |
| மிரியாம் | 18 |
| தெரிந்துகொள்வோம் | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| Health Tips | 24 |
| புறங்கூறும் சாபம் | 28 |
| Children's Corner | 29 |
| Birthday Celebrants | 34 |
| Wedding Anniversary | 37 |
| Tyre, Lebanon | 38 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

அன்பிற்கினிய துபாய் தமிழ்த் திருச்சபையின் சகோதர சகோதரிகள் அனைவருக்கும் ஆண்டவரும் அருமை இரட்சருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஒப்பற்ற திருப்பெயரில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

ஆறு மாதங்களைக் கடந்து ஏழாவது மாதத்தில் நமது விசுவாசப்பயணம் தொடர்ந்திட அருள் தந்த ஆண்டவருக்கு நம் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நன்றி பலிகளை செலுத்திடுவோம். இவ்வுலகமும் வாழ்வும் பணிகளும் நிரந்தரமற்றவை என்பதை நம் கண்களுக்குப் புலப்படாத விசக்கிருமி நமக்கு அடிக்கோடிட்டு காட்டிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் நாம் சுகத்துடனும் நல்ல உடல் நலத்துடனும் வாழ்வதற்கு ஆண்டவர் பாராட்டி வருகின்ற கிருபைகளை எண்ணி குடும்பமாக திருச்சபையாக நன்றி செலுத்துவோம்.

ஏசாயா 26:4 இறைவசனம் இவ்விதமாய் கூறுகிறது

“கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்,
கர்த்தராகிய யெகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்”.
Trust in the Lord forever. For the Lord is a rock for all ages. Isaiah 26:4.

கடவுளின் பேராற்றலையும் அளப்பறிய கிருபைகளையும் பாதுகாத்து பராமரித்து வழிநடத்தும் அதிசய செயல்பாடுகளையும் நாம் புரிந்து கொள்ள, அறிந்து கொள்ள, எளிதில் கற்றுக் கொள்ள தாம் படைத்த படைப்புகளின் வழியாகவே நமக்கு ஆண்டவரின் வார்த்தைகள் வெளிப்படுத்துகிறது. அவைகளில் சிலவற்றை உங்கள் நினைவிற்கு பதிவு செய்கிறேன்.

1. வானவில் - கடவுளின் உடன்படிக்கை. ஆதி. 9:12,13
2. மேகத்தூண் - கடவுளின் வழிநடத்துதல். யாத். 13:21
3. கற்பாறை - கடவுளின் நிலைத் தன்மை. உபா.32:4
4. இடிமுழக்கம் - கடவுளின் சத்தம். சங். 29:3
5. காற்றும் நெருப்பும் - ஆவியரின் செயல்பாடு. எசே.37, அ.நடபடிகள் 2:2,3

இதைப்போல இன்னும் பல அடையாளங்கள் திருமறையில் உண்டு. அவைகளில் இருந்து “கற்பாறை” The Rock என்ற அடையாளத்தை மட்டும் இம்மாத தியானப்பகுதியில் நாம் சிந்திப்போம்.

**The Almighty God is our Rock -பேராற்றல் மிக்க கடவுள் நமது கற்பாறை**

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் பாறை என்ற சொல் பேராற்றல் மிக்க கடவுளின் பன்முகத் தன்மைகளையும் பன்முக செயல்பாடுகளையும் வெளிப்படுத்துவதை நாம் அறிந்திருக்கிறோம். நமது அனுதின வாழ்வில் வாழ்வின் பன்முகச் சூழல்களில் நாம் அவரை எப்படிப் பார்க்கிறோம் அல்லது அவரிடம் எவைகளை எதிர்பார்க்கிறோம் என்பதை ஆண்டவரின் அடியார்களின் வாழ்வில் கடவுள் எவ்விதம் செயல்பட்டார் என்பதின் வழியே நாம் கற்றுக் கொள்வோம்.

1. The Lord is our strength - In all our weaknesses Frustrations and Depressions.

நமது பெலவீனங்கள் சோர்வுகள் மன அழுத்தங்களின் நடுவில் ஆண்டவர் நமது பெலனாயிருக்கிறார். நியா.15:18-20 சிம்சோனின் வாழ்வில் அவரது சோர்வின் மத்தியில் நீரூற்றைக் காட்டி தாகம் தீர்த்த கடவுள் இன்றும் நம்முடன் செயலாற்றுகிறார். நன்றி சொல்வோம்.

2. The Lord is our Refuge - In all our Risks and Dangers. யாத்.14:10-30

நமது வாழ்வின் ஆபத்தான நெருக்கடியான வேளைகளில் நமது உயர்ந்த அடைக்கலம் கன்மலையாகிய ஆண்டவர் மாத்திரமே. ஆகவே அவரையே பற்றிக்கொள்ளுவோம்.

3. The Lord is our only Hope - In all the Hopeless situations. 2நாளா.20:12

போர்மேகம் சூழ்ந்த வேளையில், நம்பிக்கையற்ற சூழலில் யோசபாத் ராஜா கடவுளை நோக்கிக் கூப்பிடும் சிறிய ஆனால் ஆழமான இந்த ஜெபம் நம்பிக்கையற்ற சூழலில் வாழும் நமக்கு நம்பிக்கையைத் தருகிறது.

4. The Lord is our Provider - In all our needs and short falls .
உபா 32:13 யாத்திராகமம் 17: 5-7

நமது வாழ்வின் தேவைகள் மற்றும் குறைகளின் நடுவில் அவைகளைக் கொடுக்கவும், குறைகளை நிறைவாக்கவும் வல்லமையள்ள கடவுள் நம்முடன் இருக்கிறார், ஆண்டவருக்கு நன்றி சொல்வோம்.

5. The Lord is our only source of energy - In all our efforts சங்கீதம் 121: 1

நமது வாழ்வின் அனைத்து முயற்சிகளிலும் நமக்கு ஆற்றல் தரும் ஆதாரமாய் விளங்குகின்றவர் நமது கற்பாறையான ஆண்டவர் மட்டுமே அவரையே சார்ந்து கொள்வோம்.

6. The Lord is our father - To fulfil our desires. யாத்திராகமம் 33:21-23

நமது விருப்பங்களையும் ஆசைகளையும் ஏற்றவேளையில் தகப்பனைப் போல நம்மை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுகிறவர் நமது ஆண்டவர் மட்டுமே. அவருக்கே நாம் மகிமையைச் செலுத்துவோம்.

7. The Lord is our foundation of our life - In building up our faith.

கன்மலையாகிய கிறிஸ்துவிலே நாம் இணைந்து விசுவாசத்தில் வளருகின்ற கிருபையை நாம் பெற்றிருப்போமானால் நமது வாழ்வின் அஸ்திபாரம் உறுதியாய் இருக்கிறது என்பது பொருள். இந்த அடைபட்ட நாட்களில் கன்மலையாம் கிறிஸ்துவில் நாம் இணைந்து வளர நம்மை அர்ப்பணிப்போம்.

இப்புதிய மாதத்தில் கன்மலையாம் கிறிஸ்து நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் நம்முடன் கூட இருந்து பாதுகாத்து பராமரித்து வழிநடத்தி ஆசீர்வதிப்பாராக.

ஆண்டவரின் திருப்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# உதவி போதகர் மடல்

தமது செட்டைகளின் மறைவிலே நம்மை அரவணைத்துப் பாதுகாக்கும் நமதாண்டவர் இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த நாட்களெல்லாம் நம்மை வழிநடத்தி வந்த தேவன்தாமே இப்புதிய மாதத்திலும் நம்மோடிருந்து நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. உலகம் முழுவதும் உள்ள இந்த நெருக்கடியான சூழ்நிலை விரைவில் மாறும்படியாய் அனுதினமும் ஜெபிப்போம். விரைவில் உலகமெங்கும் இயல்புநிலை திரும்பும் என்கிற நம்பிக்கையோடு காத்திருப்போம்.

## INVITATION - அழைப்பு 6

பரிசுத்த வேதாகமம் அழைப்புகள் நிறைந்த புத்தகம். அந்த அழைப்புகளில் சிலவற்றைத் தொடர்ச்சியாகத் தியானிக்க ஆயத்தப்பட்டோம். கடந்த 5 மாதங்களாக வேதாகமத்தில் இடம் பெற்றிருந்த சில அழைப்புகளைக் குறித்துத் தியானித்தோம். இந்த மாதம் அதன் வரிசையில் மற்றுமொரு அழைப்பைக் குறித்துத் தியானிப்போம்.

1. Invitation to Commitment - அர்ப்பணிப்புக்கான அழைப்பு
2. Invitation to Companionship - அன்பிணைப்புக்கான அழைப்பு
3. Invitation to Cleansing - அலசப்படுவதற்கான அழைப்பு
4. Invitation to Contentment - அடைவதற்கான அழைப்பு
5. Invitation to Contrition - அறிக்கையிடுவதற்கான அழைப்பு
6. Invitation to Consider - அறிமுகத்துக்கான அழைப்பு

இயேசு: "வந்து பாருங்கள்" என்றார். (யோவான் 1:39)
'Jesus said unto them, come and see' (John 1:39)

வேதத்தில் நாம் காண்கின்ற ஒரு அற்புதமான விஷயம் என்னவென்றால் தேவன் மனிதர்களைத் தம்மிடத்தில் வருவதற்கு அழைக்கின்றார். மனிதன் பாவியாய் இருக்கின்றான். அவனால் சுயமாக தேவனிடத்தில் வர இயலாது. எனவே எப்போதும் தேவனே, தமது அளவற்ற அன்பினாலும், இரக்கத்தினாலும், கிருபையினாலும் இதற்கான முதல் அடியை எடுத்து வைக்கிறார். இது எத்தனை ஆச்சரியமானது. இந்த வசனம் உள்ள வேதபகுதியில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து யோவானின் சீஷர்களைத் தன் அறிமுகத்துக்காக அழைக்கின்றார். நான் யார், எங்கு இருக்கிறேன்

என்பதை வந்து பாருங்கள் என்று அழைக்கின்றார். இன்றுவரை அந்த ஆண்டவர் மனிதர்களை அழைக்கின்றார். தாம் யார் என்றும், தாம் மனிதருக்காக என்ன செய்தேன் என்பதையும் அறிய வாருங்கள் என்று இன்றும் அழைக்கின்றார்.

### a. Interest of the Disciples - சீஷர்களின் ஆர்வம்:

அங்கே இருந்த இரண்டு பேரும் யோவானின் சீஷர்கள். அவர்கள் ஏற்கனவே இறையரசுக்குள் இருக்கின்றார்கள். ஆனாலும் அவர்கள் யோவான் சொன்ன "இதோ தேவ ஆட்டுக்குட்டி" என்ற கூற்றுக்குச் செவிகொடுத்து இயேசுவைப் பின்பற்ற ஆரம்பித்தார்கள். ஏற்கனவே சீஷர்களாக இருந்தாலும் உண்மையான வார்த்தையைப் பின்பற்ற மறுக்கவில்லை. மிகுந்த ஆர்வத்தோடு அந்த வார்த்தையை ஏற்றுக்கொண்டனர். இன்றும் ஒருவேளை நாம் ஆண்டவருக்குள் இருக்கலாம், ஆனாலும் நம்மை நோக்கி வரும் உண்மையான செய்தியை ஏற்றுக்கொள்ளும் ஆர்வம் நம்மிடத்தில் இருக்கவேண்டும்.

### b. Invitation to the Disciples - சீஷர்களுக்கான அழைப்பு:

இந்த சீஷர்கள் இயேசுவிடம் நீர் எங்கே தங்கியிருக்கிறீர்? என்று கேட்டபோது இயேசு வந்து பாருங்கள் என்ற அழைப்பை விடுக்கிறார். அந்த அழைப்பை ஏற்று அவருக்குப் பின் சென்றனர். அதுவரை இயேசுவைப்பற்றி கேள்விப்பட்ட சீஷர்கள் இப்போது நேரில் அவரைப் பார்க்கக்கூடிய வாய்ப்பைப் பெறுகிறார்கள். இன்றும் அதே ஆண்டவர் வந்து பாருங்கள் என்று அழைத்துக்கொண்டுதான் இருக்கிறார். இன்றே அவரது அழைப்பை ஏற்று அவரைச் சென்று சந்திப்போம். அவர் நமக்காகக் காத்திருக்கிறார். அவர் தங்கியிருக்கும் இடத்துக்கே சென்று அவரைச் சந்தித்து ஆசி பெறுவோம்.

கிறிஸ்துவின் பணியில்<br>
அருட்திரு.ஜான் வெஸ்லி<br>
உதவி ஆயர் - ஃபுளைரா.

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Master Hazaiah

S/o.Mr.Mahiban & Mrs.Annie Jone

31-05-2020

# உதவி ஆயரம்மா மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் முழுவதும் நம்மைக் கண்மணிபோலப் பாதுகாத்து நடத்தி வந்த இராஜாதிராஜன் இயேசுதாமே, இந்தப் புதிய மாதத்திலும் நம்மைப் பாதுகாத்து நடத்துவாராக. கொரோனா வைரஸ் பிரச்சனையின் நெருக்கடியான இக்காலகட்டத்தில் தேவன் தமது பிள்ளைகளுக்குத் தமது அளவற்ற பாதுகாப்பை அருளிச்செய்து ஆசீர்வதித்து வருகிறார் என்பது நிதர்சனமான உண்மை. தொடர்ந்து அவரது ஆளுகைக்குள் அடங்கியிருப்போம். அவரே நமது கோட்டை, அரண், பாதுகாப்பு, அடைக்கலம்.

## சாய்ஸ் : இரண்டில் ஒன்று

...இதோ, நான் உங்கள் முன்னே ஜீவ வழியையும், மரண வழியையும் வைக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 21:8

Behold, I set before you the way of Life and way of death.

Thus said the Lord. Jeremiah 21:8

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ரெனால்ட் ரீகன் அவர்கள் தன்னுடைய வாழ்வில் வாலிப வயதில் கற்றுக்கொண்ட ஒரு அனுபவ பாடத்தைக் குறித்து அடிக்கடி சொல்லுவதுண்டு. ரெனால்ட் ரீகன் வாலிபனாக இருந்தபோது ஒருமுறை அவரது உறவினர் ஒருவர் அவரை ஒரு செருப்பு செய்பவரிடம் அறிமுகப்படுத்தினார். அந்தச் செருப்பு செய்பவரிடம் ரீகன் தனக்கென ஒருஜோடி ஷூ செய்வதற்குச் சொன்னார். உடனே அந்தச் செருப்பு செய்யும் தொழிலாளி, சதுரமான முன்பக்கம் உள்ள ஷூவா இல்லை வளைவான முன்பக்கம் உள்ள ஷூவா என்று கேட்டார். அதைக்கேட்டு குழப்பமடைந்த ரீகன் யோசித்துக்கொண்டு நின்றார். உடனே அந்த செருப்பு செய்பவர், சரி சரி ஒன்றும் அவசரமில்லை, மெதுவாக யோசித்து ஒன்றிரண்டு நாளைக்குள் என்னிடம் சொல்லுங்கள் என்றார். இரண்டு நாட்கள் கழித்து கடைத்தெருவில் ரீகனைக் கண்ட அந்த செருப்பு செய்பவர் மீண்டும் ரீகனிடம் முடிவெடுத்துவிட்டீர்களா என்று கேட்டார். அதற்கு ரீகன் இன்னும் இல்லை, நீங்களே ஏதாவது செய்துவிடுங்கள் என்று கூறிச்சென்றார். இரண்டு தினம் கழித்து ரீகனின் வீட்டுக்கு புது ஷூக்கள் வந்து சேர்ந்தன. அவற்றைச் சோதித்துப் பார்த்த

ரீகனுக்கு மிக்க அதிர்ச்சி. ஏனென்றால் இரண்டு ஷுக்களில் ஒன்று சதுரமான முன்பக்கமும், மற்றொன்று வளைவான முன்பக்கமும் கொண்டவையாக இருந்தன. அதனைப் பார்த்த ரீகன் அன்று ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டார். அதாவது “உனக்காக நீ தீர்மானம் செய்யாவிட்டால் இன்னொருவர் உனக்காகத் தீர்மானம் எடுப்பார்” (If you don't make your own decisions, somebody else will make them for you!) என்பதே அந்த பாடம்.

பிரியமானவர்களே! நமக்கு முன்பாக தேவன் இரண்டு வழிகளை வைக்கிறார். அதனைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பையும் நம்மிடமே கொடுத்திருக்கிறார். ஆதாம்-ஏவாள் அனுபவம், இஸ்ரவேலரின் அனுபவம் நமக்குப் பாடமாக இருக்கிறது. ஆண்டவர் நம்மை அடிமைகளாக நடத்தாமல் சுதந்தரமாகத் தெரிந்தெடுக்கும்படி நமக்கு மதிப்புத் தந்திருக்கின்றார். நானே வழி என்று சொன்ன அந்த இயேசுவையே நாம் சொந்தமாக்கிக் கொண்டால், நானே ஜீவன் என்று சொன்ன அவர் நம்மை வழிநடத்திச் செல்வார். நமக்காக நாம் தீர்மானம் எடுக்காமல் விட்டுவிட்டால் கடவுள் நமக்காகத் தீர்மானம் செய்யமாட்டார். பதிலாக சாத்தான் மற்றவர்களைவிட்டு நமக்காகத் தீர்மானம் எடுக்க வைத்துவிடுவான். கர்த்தாவே, நீர் காட்டும் வழியில் செல்ல, அதையே நான் தெரிந்தெடுக்க எனக்குத் துணை செய்யும் என்று ஜெபிப்போம். தேவன்தாமே நமக்குத் துணை செய்து நாம் அவரது வழியைத் தெரிந்தெடுத்து அதிலே விலகாமல் நடப்பதற்குரிய பெலனைத் தருவாராக.

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி. ஏஞ்சலின் ரூபா ஜான் வெஸ்லி
உதவி போதகரம்மா - ∴புஜைரா.

# PRAY

## UNTIL YOUR SITUATION CHANGES.

Miracles happen everyday.

So, never stop believing in GOD and His timing.

He can change things in an instant.

**AMEN.**

வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை பெற்று வாழும் நாம் கர்த்தரை மகிமைப்படுத்தி ஸ்தோத்தரிப்போம். இவ்வருடத்தின் ஏழாம் மாதமாகிய ஜுலை மாதத்தினுள் கர்த்தருடைய கிருபையால் பிரவேசிக்கின்றோம். கடந்த நாட்களில் நாமும், உலகத்தின் மக்களும், கேட்டறிந்த பயத்தின் தகவல்கள், வீழ்ச்சியின் செய்திகள், இன்னும் அனேக துயர சம்பவங்கள் நாம் கர்த்தரை மகிமைப்படுத்தி வாழ்வதற்கு மீண்டும் ஒரு வாய்ப்பினை அருளியிருக்கிறார். எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் ஏறெடுப்போம். நம்முடைய இணைந்த ஜெபத்தின் வாயிலாக கர்த்தர் உலகில் புது மாற்றங்களைத் தந்தருளுவாராக. கர்த்தரின் வசனம் ஜெபத்துடன் தியானிப்போம்.

திருமறைப்பாடம் : எபிரெயர் 6:13-20 தியான வசனம் : எபிரெயர் 6:19

"அந்த நம்பிக்கை நமக்கு நிலையும், உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது." எபிரெயர் 6:19

"This hope we have as an anchor of the soul, both sure and steadfast and which enters the presence behind the veil." Hebrews 6:19

இயேசுகிறிஸ்து தனது மகிமையுடன் மறுபடியும் வருவார் என்பது கிறிஸ்தவ விசுவாசிகளின் பிரதான நம்பிக்கை ஆகும். இறைவனில் கொண்டுள்ள உண்மையான விசுவாசமே நம்பிக்கை. எபிரெயர் 11:1-ல் விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நம்பிக்கையும், விசுவாசமும் ஒன்றோடொன்று இணைந்து காணப்படுகிறது. கர்த்தரிடம் நாம் கொண்டுள்ள நம்பிக்கை எத்தகையதாய் அமையவேண்டுமென தியானிப்போம்.

1.கர்த்தர் நம்பிக்கைக்குரியவர்: மானிடரின் நம்பிக்கைக்கு உரியவர் இறைவன் ஒருவரே. அவர் இஸ்ரவேலின் நம்பிக்கையாயிருந்தவர் (எரேமியா 17:13). நம் எல்லோருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமானவர். 1 பேதுரு 1:21-ல் உங்கள் விசுவாசமும், நம்பிக்கையும் தேவன் மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையாயிருக்கிறீர் என சங்கீதக்காரன் ஆண்டவரின் மீது கொண்டுள்ள நம்பிக்கையைக் கூறுகிறார். கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள், அவர் நித்திய கன்மலையாயிருக்கிறார் என ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார் (ஏசாயா 26:4).

நித்திய கன்மலையாகிய இறைவன்தான் நம் நம்பிக்கைக்குரியவர். நிலையான நம்பிக்கையைக் கர்த்தரில் வைத்து இறுதிமட்டும் நிலைத்திருக்கவேண்டும். விசுவாசிகளின் தகப்பன் என அறியப்படும் ஆபிரகாம், தான் கடவுளால் அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். தன்னுடன் வாக்குறுதி கொடுத்தவர் வல்லவர் என உறுதியுடன் நம்பி, விசுவாசத்தில் வல்லவரானார். இச்செயல் கடவுளில் கொண்டிருந்த நிலையான, அசைக்க இயலாத நம்பிக்கையை வெளிப்படுத்தியது. கர்த்தரை நம்பிக்கையாகக் கொண்டோர் வெட்கப்படுவதில்லை. ஆகவே கர்த்தரை வாழ்வில் நம்பிக்கையாக வைத்து பின்பற்றுவோம்.

**2.கர்த்தரிடம் உறுதியாக நம்பிக்கை கொண்டு வாழ்தல்:** எபிரெயர் 6:19 “அந்த நம்பிக்கை நமக்கு நிலையும், உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.” இறைவனிடம் உறுதியான நம்பிக்கை கொண்டவர்களாய் வாழ்வது சிறப்பிற்குரியதாகும். நங்கூரமானது அளவில் சிறியதாயினும் அதைவிட பன்மடங்கு பெரிதான கப்பலை அப்படியே நிலைத்து நிற்கவும் அந்நிலையில் உறுதியுடன் நிற்கவும் உதவுகிறது. அதுபோல் உலக வாழ்வின் போராட்டங்களினால் நமது விசுவாச கப்பல் சிதைந்து போகாமல், சேதப்படாமல் பாதுகாக்க நாம் இறைவனில் கொண்டுள்ள நம்பிக்கை நங்கூரம் போன்று நமக்குத் துணை நிற்கும்.

இறைவனின் கிருபை நிறைந்த வசனத்தைக் கேட்டு விசுவாசிகளாகும் போது, பரிசுத்த ஆவியால் இறைவன் முத்திரை போடுகின்றார் என பரிசுத்த பவுல் எபேசிய திருச்சபைக்கு எழுதுகின்றார் (எபே.1:13,14).

நாம் உயிர்த்தெழுந்த இறைவனில் கொண்டுள்ள நிலையானதும், உறுதியுள்ளதுமான நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள், இறைவன் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான் (1யோவான் 3:3).

நாம் கர்த்தரில் வைக்கும் நம்பிக்கையில் மிக உறுதியாய் இருப்போம். அந்த நம்பிக்கை இந்த உலகில் உண்மையாய் வாழ்வதற்கு நமக்கு நங்கூரமாய் அமையவும் இறைவன் அருள்புரிவாராக. கர்த்தர் இந்த வசனங்களினால் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர் - RAK.

# உதவி ஆயரம்மா மடல்

மகிமை நிறைந்தவரான இயேசுகிறிஸ்துவுக்கு துதி, ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம். கர்த்தருடைய கிருபையால் கடந்த ஆறுமாதம் முழுவதும் நம்மைப் பாதுகாத்து புதிய மாதத்தினைக் காணக் கிருபை செய்த கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். இந்தப் புதிய மாதம், அருளும் ஆசியும் நிறைந்ததாக அமைய கர்த்தர் அருள்புரிவாராக.

## பெர்கமு சபை

### திருமறைப்பாடம் : வெளி. 2:12-17

பெர்கமு நகரம், அலெக்சாந்தர் பேரரசு பல பகுதிகளாகப் பிரிந்தபோது அதன் ஒரு பகுதியாக அத்தாலித் பேரரசின் (Attalid Kingdom) தலைநகராக (கி.மு. 231-133) இருந்தது. கி.மு. 133-க்குப் பின்னர் ரோமப்பேரரசின் ஆளுகைக்குட்பட்டது. ரோமர் ஆசியப்பகுதியின் தலைநகராக மாற்றினர். பெர்கமு நகரம் எபேசு, சிமிர்னா நகரத்தைப் போன்று வியாபாரத்தில் சிறப்புடன் திகழவில்லை என்றாலும் தலைநகரமாக விளங்கியதால் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றிருந்தது. மிகப்பெரிய நூலகம் காணப்பட்டது.

சமய வழிபாட்டின் மைய இடமாக பெர்கமு திகழ்ந்தது. சாத்தானுடைய சிங்காசனம் என யோவான் இதனை வர்ணிக்கிறார் (வெளி.2:13). பெர்கமு நகரின் பின்புறம் முக்கோண வடிவில் மலை ஒன்று காணப்பட்டது. சிலை வழிபாட்டுக் கோயில்கள் அதிகமாக இருந்தது. சியஸ் (Zeus), அத்தேன் (Athene) ஆகிய கிரேக்க தெய்வங்களின் வழிபாட்டுத் தலங்கள் இந்த மலையில் இருந்தன. மேலும் இந்த நகரில் சீசர் வழிபாடும் காணப்பட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பெர்கமு சபையார் சீசர் வழிபாட்டை எதிர்த்ததுடன் கிறிஸ்துவின் பெயரை மறுதலிப்பதற்கும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

### விசுவாசத்தில் உறுதியாயிருந்த திருச்சபை:

பெர்கமு சபையினர் சாத்தானின் சிங்காசனம் இருந்த இடத்தில் குடியிருப்பதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார் (வெளி.2:13a). இத்தகைய இடத்திலிருந்து பயந்து விலகி ஓடவில்லை. கிறிஸ்துவை உறுதியாய் பற்றிக்கொண்டு, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு சாட்சியாய் வாழ்ந்தனர். கிறிஸ்தவர்களில் ஒருவராகிய அந்திப்பா கொலை செய்யப்பட்டு இரத்த

சாட்சியாய் மரித்தார். அத்தகைய பாடுகள் நிறைந்த நாட்களிலும் ஒருவரும் கிறிஸ்துவை மறுதலிக்கவில்லை (வெளி.2:13b). கடின பாடுகளைக் கண்டு விலகி ஓடுவது அல்ல, அந்தக் கடினமான சூழலிலும் கிறிஸ்துவுக்குச் சாட்சியாய் இருப்பதே சிறப்பானது. உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் (யோவான் 16:33) என்ற இறைவார்த்தையை உறுதியாய் நம்பினார்கள். பெர்கமு சபையின் மக்கள் கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றிக்கொண்டு, உபத்திரவத்தின் நாட்களிலும் கிறிஸ்துவை மறுதலிக்காமல் வாழ்ந்ததைப்போன்று நாமும் வாழ்வோம்.

### மனம்மாற அழைக்கப்பட்ட திருச்சபை:

பெர்கமு சபையில் சில காரியங்களைக் குறித்து குறை உண்டு என (வெளி.2:14) கூறப்பட்டுள்ளது. பிலேயாம், இஸ்ரவேலர் பாவம் செய்ய காரணமாயிருந்தான் (எண்.31:16). அதுபோல பெர்கமு சபையிலும் கர்த்தர் வெறுக்கும் செயல்களைச் செய்பவர்கள், சிற்றின்பங்களுக்கு அடிபணிதல் போன்ற தவறான பிலேயாமின் போதகத்தைப் பின்பற்றுகிறவர்களும், நிக்கொலாய் மதஸ்தரின் போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் (வெளி.2:15) இருக்கிறார்கள். அவர்கள் மனந்திரும்ப அழைக்கப் படுகிறார்கள். இவ்வுலகின் சிற்றின்பங்களை ஒழிப்போர் பரலோக வாழ்வின் மகிழ்வைப் பெறுவார். மனம் திரும்பாவிடில் ஆண்டவர் தம் வாயின் பட்டயத்தால் யுத்தம் பண்ணுவேன் (வெளி.2:16) என்று கூறுகின்றார். ஆகவே தவறைவிட்டுவிட்டு மனம் திரும்ப அழைக்கப்படுகிறோம்.

ஜெயங்கொள்ளுகிறவனுக்கு மறைவான மன்னா புசிக்கக் கொடுக்கப்படும் என (வெளி.2:17) எழுதப்பட்டுள்ளது. வனாந்திர பயணத்தில் இஸ்ரவேலர் பசியாற கர்த்தர் மன்னாவால் போஷித்தார். அப்படியே மனமாற்றத்தின் தூய வாழ்வைத் தொடரும்போது மன்னாவும் அவரவர் பெயர் பொறிக்கப்பட்ட வெண்கல்லும் பரிசாக பெறுவர் என வர்ணிக்கிறார்.

விசுவாச வாழ்வு என்பது முற்றுப்பெறுவது அல்ல, அது வாழ்வின் இறுதிவரையிலும் தொடரவேண்டியது. பெர்கமு சபையில் காணப்பட்டது போன்று விசுவாசத்திற்கான சவால்கள் நம்மைச் சூழ்ந்து கொண்டேயிருக்கும். அவற்றில் வீழ்ந்து விடாமல் விசுவாசத்துடன் வாழ்வைத் தொடர கர்த்தர் அருள்புரிவாராக.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. J.விஜிலா ராணி
உதவி ஆயரம்மா - RAK.

# செயலர் மடல்

சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாய் செய்து முடித்து, நம் ஆலோசனைகளையும், நடைகளையும் உறுதிப்படுத்தி இன்னும் ஒரு புதிய மாதத்தைக் காணச்செய்த நம் தேவாதி தேவனுக்கு துதிகளையும், கனத்தையும், மகிமையையும் செலுத்துகிறேன்.

கடந்த மாதத்திலும் நம் திருச்சபையின் அனைத்து நிகழ்வுகளும் (Friday service, Junior Church, Cell prayers, Camp ministries) online மூலமாய் கர்த்தரின் மேலான கிருபையால் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

இந்த July 20 மாதத்திலும் நம்முடைய Trinity ஆலயம் வழிபாட்டிற்குத் திறக்கவேண்டி அரசு ஆணைக்காக காத்து இருக்கிறோம். பலவித restrictions உடன் ஆலயங்கள் இம்மாதத்தில் திறக்க வாய்ப்புள்ளதாக நம்புகிறோம்.

நம் சபை போதகர் கடந்த மாதத்தில் அறிவித்தவண்ணமாக, சபையார் யாரேனும் தற்போது உள்ள சிக்கலான சூழலில் அவதிப்பட்டால், தயவுசெய்து நம் சபை போதகர் அவர்களைத் தயக்கமின்றி அணுக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நம் திருச்சபை கஷ்டமான சூழலில் இருப்போருக்கு உதவிக்கரம் நீட்ட காத்து நிற்கிறது. தயவுசெய்து தயங்கவேண்டாம். வரும் July 20 மாதத்தில், நம் Junior Church, தங்களுடைய பிள்ளைகளுக்கு எல்லா Friday-யிலும் Online Retreat நடத்த ஆயத்தமாகி இருக்கிறார்கள். சபையார் தங்கள் பிள்ளைகளை ஊக்கப்படுத்தி இந்த Retreat-ல் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறேன்.

இந்த கடினமான கட்டுப்பாடான நேரத்திலும் என்னோட கூட online ஒளிபரப்பை நடத்த உதவும் அனைத்து சகோதரர்களுக்கும் Cell prayers, Junior Church, Camp ministry மற்றும் எல்லா ஊழியங்களிலும் தங்களை ஈடுபடுத்தி உழைக்கும் அனைத்து சகோதரர், சகோதரிகளுக்கும், Pastor அய்யா, அம்மாவுக்கும், Bro.Simon, Mr.Stalin, எங்கள் EC members அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

Corona virus-ஆல் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து குடும்பங்களுக்காகவும், வேலை இழந்தோர், சம்பளம் இன்றி தவிப்போர் மற்றும் பல இக்கட்டான சூழ்நிலைகளில் சிக்கித் தவிப்போரை சபையார் தங்கள் தனிப்பட்ட, குடும்ப ஜெபங்களில் தாங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலும் சபையார் தங்களின் கருத்துக்களை, விண்ணப்பங்களை, அறிவுரை மற்றும் ஆலோசனைகளை suggestions@csitamilparishdubai.com என்ற email address-க்கு தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் நம்முடைய சகலவித காரியங்களும் இயல்பான நிலைமைக்குத் திரும்ப கர்த்தரை நோக்கி ஊக்கமாக நம்முடைய ஜெபங்களை ஏறெடுப்போம். நம்முடைய தேவன் எல்லாவித இக்கட்டுகளிலிருந்தும் நம்மை விலக்கிக் காத்து, செவ்வையான பாதையிலே வழிநடத்துவார்.

ஜெபமே ஜெயம்.

Babu Jeyaseelan, Secretary.

# வருந்துகிறோம்

**"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"**

நமது சபையின் முன்னாள் அங்கத்தினரும்,
Mr. R. Raslin Jose அவர்களின் சகோதரரும்,
Mr. J. Jebin Rajakumar அவர்களின் தகப்பனாருமான
Mr. R. Jayasingh அவர்கள் கடந்த 29-05-2020 அன்றும்
நமது சபை அங்கத்தினர்
Mrs. Gold Sheeba Peter Gnanasigamony அவர்களின் தகப்பனார்
Mr. Muthu Nayagam அவர்கள் கடந்த 08-06-2020 அன்றும்
நமது ஃபுஜைரா சபை அங்கத்தினர்
Mr.R.Daniel Godwin அவர்களின் துணைவியார்
Mrs.Cynthia Carolin Daniel அவர்கள் கடந்த 09-06-2020 அன்றும்
நமது சபை அங்கத்தினர்
Mr. Ralston Jayadhas அவர்களின் தாயார்
Mrs. Mercy Johnson அவர்கள் கடந்த 30-06-2020 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்." 1தீமோத்தேயு 6:7,8.

அரும்பெரும்
ஒரு சிசு
சுவாமி கர்த்தரின்
உலகில் உதயமாக
தேவனே...
காரண கர்த்தர்
'கர்ப்பத்தின் கனி
கர்த்தரால் வந்தது'
அறிவோம் தானே...
கர்த்தர் அருளும்
செல்லக்குழந்தை
செல்வக்குழந்தை
அது...
பெண்மணி
ஆண்மணி
இது... நம்
கண்மணி.. என
போற்றி தேற்றி
வளர்க்க
தாய் தந்தை தந்ததும்
கடவுளாம்
கர்த்தர் தானே...
பிள்ளை கனியமுது
வளர... வளர..
கல்வியும்
அல்லல் இன்றி
வாழ வேலையும்
வளமாய் வாழ
அருளுடன் கூடிய
பொருள் தருவதும்
கர்த்தரே...
பருவம் மாறும் காலம்
உருவம் அழகுறும்
இளமைக்காலம்
அன்பு அரும்பும்
இன்பம் விரும்பும்
வாலிப காலம்
தன் வீட்டின்
பெண்மணியாய்
வளரும் - ஒரு
பெண்மணிக்கு-ஒரு
அன்பு கணவரையும்
உறவுகள் படர - அது
தொடர - ஒரு
ஆணுக்கு - ஒரு
அன்பு மனைவியையும்
இல்லற வாழ்வில்
இணைக்கிறார்
இறை இயேசு...
ஒரு குடும்பம்
உருவாகிறது
மணல் தரிகள் போல்
குலம்
பல்கி பெருகுகிறது.
ஒன்றுமே கூடவே
கொண்டு பிறக்காத
நமக்கு... இவ்
உலகில்...
ஆண்டு அனுபவிக்க
அனைத்தும்
அருளுகிறார்
இயேசு சுவாமி.
இதுவன்றோ
இறைத் தத்துவம்
மூவுலகின் மூல...
காரணமும் காரியமும்
திரித்துவ
தேவனாம் ஒருவரே...
பரமானந்தம் வரும்
பரம் தரும்
கர்த்தரை தரிசித்து
தபசிருந்து ருசித்து
வாழ்ந்தோம் எனில்
இதயத்தின்...
முன்னும் பின்னும்
முடிச்சுகள்...
அவிழ்ந்துவிடும்
மனம் நொந்து வரும்
சந்தேகங்கள் யாவும்
மறைந்துவிடும்
எங்கோ எப்போதோ
உள்ள
வினையும் பயமும்
அழிந்துவிடும்.
எங்கேயும் எதிலும்
எப்போதும்
இயேசுவையே
காண்போம். பின்பு...
இன்பத்துக்கும்
இனிமைக்கும்
சொல்லவும்
வேண்டுமோ?

தொடரும்....

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# அறிந்து கொள்வோம்!

## பூரிம் பண்டிகை - Festival of Lots (Purim)




பூரீம் பண்டிகை யூதர்களின் பண்டிகைகளில் ஒரு முழு நாள் நீடிக்கும் ஒரு நாள் பண்டிகை. பண்டைய பாரசீக சாம்ராஜ்யத்தில் அழிவிலிருந்து யூத மக்கள் விடுவிக்கப்பட்டதை அவர்கள் கொண்டாடுவதால், இது அனைத்து யூத விடுமுறை நாட்களிலும் மிகவும் மகிழ்ச்சியான ஒன்றாகும்.

பூரீமின் கதை, எஸ்தர் என்னும் சரித்திர புத்தகத்தில் முக்கியமான மூன்று கதாபாத்திரங்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. எஸ்தர், அவரது உறவினர் மொர்தெகாய் மற்றும் யூத மக்களை அழிக்கச் சதி செய்த தீய மனிதன் ஆமான். யூத மக்களை அழிக்கச் சதித்திட்டத்தை நிறைவேற்ற நெருங்கிய ஆமானின் வீழ்ச்சியை யூத மக்கள் கொண்டாடுகிறார்கள். மாறாக, மொர்தெகாய் மற்றும் எஸ்தரின் வீரத் திட்டமிடல் காரணமாக மக்கள் காப்பாற்றப்பட்டனர்.

எஸ்தர், ஒரு அனாதையாக இருந்தபடியால், பெர்சியாவில் தனது உறவினர் மொர்தெகாயால் வளர்க்கப்பட்டார். அவர் ஒரு அழகான, இளம் யூதப் பெண். பெர்சியாவின் ராணியான வஸ்தி, பெர்சியாவின் ராஜாவான ஆகாஸ்வேருவுக்கு கீழ்ப்படியாதபோது எஸ்தர் ராணியாக தெரிவு செய்யப்பட்டு ராணியானார். ஆனால் எஸ்தர் யூதப் பெண் என்பது ராஜாவுக்குத் தெரியாது.

ஆமான் அமலேக் தேசத்தைச் சேர்ந்தவன். ராஜாவின் ஊழியர்கள் மற்றும் அவரது அரண்மனை பிரபுக்கள் அனைவரும் அவனை வணங்கும் தகுதியுடையவனாய் காணப்பட்டான். ஆனால் மொர்தெகாய் ஒரு யூதர் என்பதால் அவர் ஆமானைப் பார்த்து தலைவணங்கவில்லை. இது ராஜாவின் கட்டளையின் மீறலாகும். (எஸ்தர் 3:3). இது ஆமானுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. ஆகவே அவன் அந்த முழு ராஜ்யத்திலும் உள்ள யூதர்கள் அனைவரையும் அழிக்கச் சதி செய்தான். இதைப் பற்றி அறியாத ராஜாவோ, ஆமானின் ஆலோசனையை ஏற்று யூத மக்களின் தலைவிதியை அவரிடம் ஒப்படைத்தார். ஆமான் பின்னர் யூதர் அனைவரையும் அழிக்கத் திட்டமிட்டான். (எஸ்தர் 3:8-11).

ராஜாவைத் தைரியமாகச் சந்திப்பதன் மூலம் யூத மக்களைக் காப்பாற்ற மொர்தெகாய் எஸ்தருக்கு அறிவுரை வழங்கினார். அவர்கள் சார்பாக கெஞ்சினார். இந்த நோக்கத்திற்காக, தான் ராணியாக உயர்ந்திருக்கலாம் என்று அவளிடம் சொன்னார். எஸ்தர் ராஜாவை அணுகி அவனுக்கும், ஆமானுக்கும் ஒரு விருந்துக்குத் திட்டமிட்டாள். ஆனால் ராஜாவினிடம் செல்வதற்கு முன்பாக அவளும் யூதமக்கள் அனைவரும் மூன்று நாட்கள் உபவாசம் மேற்கொண்டனர். அதன் பின்னர் அவள் ராஜாவின் முன்னிலையில் நுழைந்தபோது, அவனுடைய கோபத்திற்குப் பதிலாக அவனுடைய கிருபையைக் கண்டாள். (எஸ்தர் 4).

விருந்துக்கு முன்னர் மொர்தெகாயை, தன்னை வணங்காததற்காக ஆமான் அவனுக்கு ஒரு தூக்கு மேடையை தயார் செய்தான். விருந்துக்கு முந்தைய நாள் இரவு, ராஜாவால் தூங்க முடியவில்லை. எனவே நாளாகம புத்தகத்தை வாசிக்கும்படி கேட்டார். அப்போது, மொர்தெகாய் செய்த நல்ல காரியங்களுக்கு அவருக்கு வெகுமதி கிடைக்கவில்லை என்பதை உணர்ந்தார். (எஸ்தர் 6) ஆமானின் ஆலோசனையைக் கேட்டு மொர்தெகாய்க்கு ராஜ மேன்மை கிடைக்கச் செய்தார்.

எஸ்தர் ராஜாவுக்குத் தயாரித்த விருந்தில், ஆமானின் முன்னிலையில் ராஜாவிடம் தன் மக்களை நிர்மூலமாக்காமல் காப்பாற்றும்படி அவள் அவனிடம் கெஞ்சினாள். ராஜா எல்லாக் காரியங்களையும் கேள்விப்பட்டு ஆமானை தூக்கிலிட உத்தரவு பிறப்பித்தான். அதன்பிறகு மொர்தெகாயை ஆமானின் நிலைக்கு உயர்த்தினார். யூதர்கள் அனைவரும் காப்பாற்றப்பட்டனர். (எஸ்தர் 8:1-7)

இன்றும் எஸ்தரின் மூன்று நாள் உபவாசம் பூரீம் அன்று முடிவடையும். இது எஸ்தரின் சரித்திரத்தில் யூத மக்கள் கடைபிடித்த மூன்று நாள் உபவாசத்தை நினைவு கூருகிறது. (எஸ்தர் 9). பூரீம் என்பது ஆமான் திட்டமிட்ட அழிவிலிருந்து யூத மக்களை விடுவித்ததை நினைவுகூரும் விடுமுறை. இறைவனின் விவிலிய விருந்துகளில் பூரீம் சேர்க்கப்படவில்லை என்றாலும், இது எஸ்தர் 9ல் மொர்தெகாயால் கட்டளையிடப்பட்ட ஒரு வழக்கமாகும்.

பாரம்பரிய பூரீம் பண்டிகைகளில் ஜெப ஆலயங்களில் எஸ்தரின் முழு சரித்திரத்தையும் வாசிப்பது வழக்கம். மறைக்கப்பட்ட அடையாளங்கள் எஸ்தரின் புத்தகத்தில் ஒரு வலுவான கருப்பொருள் என்பதால், பூரீமில் ஆடைகளை அணிவது பாரம்பரியமான ஒன்றாகிவிட்டது. ஒருவருக்கொருவர் உணவு, பரிசுகளையும் வழங்குவது வழக்கமாக காணப்பட்டது. இப்போது பரிசுகளை வழங்குவதுதோடு மட்டுமல்லாமல், ஓஸ்னி ஆமான் (Oznei Haman - ears of Haman) எனப்படும் முக்கோண குக்கீஸ் (cookies) சாப்பிடுவது ஒரு பாரம்பரியமாகக் கருதப்படுகிறது.



தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

"ஆண்டவரே, எனக்கு இரங்கும், நாடோறும்
உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்." சங்கீதம் 86:3

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- கர்த்தருடைய கிருபையால் காணொளி காட்சி மூலம் நமது திருச்சபை ஆராதனைகள் வெகுசிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக நன்றி கூறுவோம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- கொரோனா பாதிப்புகளிலிருந்து கர்த்தர்தாமே யாவரையும் பூரணமாய் விடுவித்து பாதுகாத்து நடத்திட தொடர்ந்து ஜெபிப்போம்.

"ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை நிறைந்தவருமாயிருக்கிறீர்." சங்கீதம் 86:5

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# மிரியாம்

தன் பிஞ்சு சகோதரனைக் காத்த பிரியமுள்ள சகோதரி மிரியாம். அம்ராம், யோகெபேத் பெற்றெடுத்த மூன்று தவப்பிள்ளைகளில் மூத்த பெண்தான் மிரியாம், மிகச் சாதாரணமான சிறுமியாகிய அன்பு மகள் தாயின் ஜெபத்தினாலும், வளர்ப்பினாலும் தேவனது சித்தம் அர்ப்பணிக்கையில் மிக அசாதாரணச் செயல் புரிந்து ஒரு தலைவனை உருவாக்குவதில் மிகப் பெரிய பங்கு வகித்தாள்.

1. பொறுப்பு ஏற்ற சிறுமி: பார்வோன் ராஜாவின் கட்டளைப்படி குழந்தைகளைக் கொன்று கொண்டிருந்த கொடிய காலத்தில் தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பைக் கருத்துடன் செய்தாள். நாணல் பெட்டியில் வைத்து நதியோரமாய் நாணலுக்குள் வைக்கப்பட்ட குழந்தையாகிய தன் சகோதரன் மோசேக்கு என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படிக்கு தூரத்தில் நின்று கவனித்து, காவல் காக்கும் பணியைச் சிறுமியாம் மிரியாம் செய்தது மிக ஆச்சரியமாயுள்ளது. நம்மைச் சுற்றியுள்ள சிறுவர், சிறுமியரை அற்பமாய் நினைத்து விடக்கூடாது. சிறு பிள்ளைகளை நேசிக்கும் தேவன் அவர்களைக் கூட தமது பணியில் பயன்படுத்தமுடியும்.

2. தியாகச் சிறுமி மிரியாம்: இஸ்ரவேலை வேரோடு அழிக்க ராஜா திட்டமிட்டு குழந்தைகளைக் கொன்று அங்குமிங்கும் அலரல் சத்தம் கேட்கப்பட்டும், நடுநடுங்கிக் கொண்டிருந்த பெற்றோர்களின் அவலக்குரலும் கேட்டுக் கொண்டிருந்த நேரம் அது. இரகசியம் தெரிந்தால் தன் உயிருக்கே ஆபத்து வரலாம் என அறிந்தும், சகோதரனைக் காப்பதை தன் முக்கியப்பணி என ஏற்று நின்றாள். இது தான் உடன்பிறப்பின் பாசம்.

3. துணிச்சலான சிறுமி: பார்வோனின் குமாரத்தி பிள்ளையை எடுத்தவுடன், ஓடிச் சென்று “உமக்கு இந்தப் பிள்ளையை வளர்க்கும்படி எபிரெய ஸ்திரீகளில் பால்கொடுக்கிற ஒருத்தியை நான் போய் உம்மிடத்தில் அழைத்துக்கொண்டு வரட்டுமா என்றாள்” (யாத்2:7). சூழ்நிலையைப் பார்க்கவில்லை. நிற்பது யார் என பார்க்கவில்லை. இராஜ குமாரத்தியிடம் கேட்ட கேள்வியிலிருந்து அவளது தைரியம், சமயத்துக்கேற்ற வார்த்தை, நேரத்திற்குத் தகுந்தாற் போல செயல்படும் தன்மை, சுறுசுறுப்பு, கவனம், பொறுப்புணர்ச்சி இங்கு வெளிப்படுகிறது. இதனால் தன் தம்பி காப்பாற்றப்பட்டு 30 லட்சம் மக்களை அழிவிலிருந்து காப்பாற்றும் தலைவனானான். இக்காலத்தில் எத்தனையோ பிஞ்சு உள்ளங்கள், ஏழைப் பிள்ளைகள், கிராமத்துச் சிறுவர்கள் காப்பாற்றப்பட முடியாமல் கெட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய செயல், பேச்சு, நடக்கை அவர்களை விடுவிப்பதோடு அநேகர் அவர்கள் மூலம் இரட்சிக்கப்பட வழிவகுக்கும்.

4. விசுவாசப்பிள்ளை மிரியாம்: இராஜ குமாரத்தியிடம் கேட்ட கேள்வியிலிருந்து அவளது தைரியம் வெளிப்படுகிறது. 2 பேதுரு 1:5ன்படி இது விசுவாசத்தின் மூலம் வந்தது. மனதின் துணிகரமும் விசுவாசமும் தன் தாயையே கூட்டி வரச் செய்தது.

இந்த விசுவாசம் தன் தாயினிடமிருந்து அவளுக்கு வந்தது. தன் மூன்று பிள்ளைகளும் இஸ்ரவேலை வழிநடத்தக் கூடியவர்களானார்கள். நம் விசுவாசம் நம்முடன் இருக்கும் மற்றவர்களையும் தொற்றிக் கொள்ளும். நம் சாட்சியின் வாழ்க்கை மூலம் இளைய தலைமுறை ஆசீர்வாதமாயிருப்பார்கள்.

5. தேவ நோக்கத்தை நிறைவேற்றிய தீர்க்கதரிசி: முதல் முதலில் தீர்க்கதரிசினி என்று பெயர் சூட்டப்பட்டவள் மிரியாம். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டதன் நோக்கம் தேவனை ஆராதிப்பதற்காகவே (யாத் 4:22,23). எகிப்தின் அடிமைத் தனத்திலிருக்குமளவும் அவர்கள் தேவனை ஆராதிக்க முடியவில்லை. இஸ்ரவேலர் செங்கடலைக் கடந்தபோது, மிரியாம் தன் கையிலே தம்புருவை எடுத்து மீட்டினாள். சகல ஸ்திரீகளும் தம்புருக்களோடும் நடனத்தோடும் தேவனைப் புகழ்ந்து பாடி ஆராதித்தனர். மிரியாம் இப்படி ஆடிப்பாடும்போது அவள் வயது கிட்டத்தட்ட 85-90 இருக்கும். தீர்க்கதரிசன வரமும் இந்த சமயத்தில் வெளிப்படுகிறது. தேவனை ஆராதிக்கவும், எழுப்புதலில் பங்கு வகிக்கவும், மற்றவர்களை வழி நடத்தவும் வயது வரம்பில்லை. தமது பிள்ளைகள் தம்மைத் துதிப்பதில் தேவன் மகிழ்வடைகிறார். பட்சபாதமில்லாமல் யாவருக்கும் வரங்களைத் தந்து சபையிலே பயன்படுத்துபவர் தேவன்.

6. மிரியாமின் தவறும், விளைவும்: தன் சகோதரனைக் காப்பாற்றிய அன்பு சகோதரி, வனாந்தர வாழ்வில் சில வருடங்கள் கடந்தபின் மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கிறாள். மிரியாமும், ஆரோனும் “கர்த்தர் மோசேயைக் கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்” (எண். 12:2). இதனால் தேவ தண்டனையையும் சாபமும் பெற்று குஷ்டரோகியானதால் பிரயாணம் 7 நாட்கள் தடைபட்டு, இஸ்ரவேலே ஸ்தம்பித்து நின்றது. மிரியாமின் பாசமிக்க சகோதரன் மோசே வேதனையுடன் மிரியாமுக்காக பரிந்து மன்றாடி சுகம் கேட்டுப் பெற்றான். சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் தேவன் அருவருக்கும் காரியங்களில் ஒன்று (நீதி. 6:19). “நீ உட்கார்ந்து உன் சகோதருக்கு விரோதமாய் பேசி, உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்.... நான் உன்னைக் கடிந்து கொண்டு, அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன்” (சங். 50:20,21) என கர்த்தர் கூறுகிறார். “சகோதர சிநேகம் நிலைத்திருக்கக் கடவது”(எபி. 13:1). சகோதர சிநேகத்தை கட்டிக்காக்க வேண்டும். மிரியாமைப் போல புறங்கூறுதல் குடும்பங்களை பிரிக்கும், மனக்கசப்பைத் தரும், தனிமையாக்கும், தேவசாபம் வரும்.

மிரியாம் இஸ்ரவேலின் தீர்க்கதரிசியாக பல்லாண்டுகள் உண்மையுடன் சேவை செய்திருக்கலாம். தன் சகோதனுக்கு விரோதமாய் துணிச்சலாய் பேசினதினால் அவள் வாழ்வு கசப்படைந்து வனாந்திரத்தில் முடிவடைந்தது. மிரியாம் கானானுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. சாத்தானும் நமது திறமைகளை உபயோகித்து நம்மைச் சோதிக்கக்கூடும். நாம் விழிப்புணர்வுள்ளவர்களாய் அவனை மேற்கொண்டு ஜெயம் எடுக்க கர்த்தர் தாமே உதவி செய்வாராக.

இனிதா மோசஸ்

# தெரிந்து கொள்வோம்

**மிஷனெரிகள் பகுதி 82**

**அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் - மத்தேயு 9:37**

**திரு. பக்த் சிங்**



திரு.பக்த் சிங் அவர்கள் 1903-ம் ஆண்டு ஜூன் 6-ம் நாள் பிரிட்டிஷ் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் சீக்கிய குடும்பத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் திரு.லால் ஜவஹர் மால் மற்றும் திருமதி. லட்சுமி பாய் ஜோயா.

ஆரம்பக் கல்வியை ஒரு கிறிஸ்தவ மிஷனெரி பள்ளியில் படித்தார். சீக்கிய கோவில் வழியாக சமூகப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். 1915-ம் ஆண்டு ஜூன் 6-ம் நாள் ராமபாயை திருமணம் புரிந்தார். பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார். பின்னர் உயர் படிப்புக்காக இங்கிலாந்து சென்று வேளாண்மைப் பொறியியல் படித்து முடித்தார்.

இங்கிலாந்தில் படித்த நாட்களில் தன்னுடைய நண்பர்கள் மூலமாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு வேதாகமத்தைப் படிக்கத் தொடங்கினார். 1932-ம் ஆண்டு பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஞானஸ்நானம் பெற்றார்.

1933-ம் ஆண்டு இந்தியா வந்தார். தான் கிறிஸ்தவத்திற்கு மாறிய விவரத்தை பெற்றோரிடம் தெரிவித்தார். அவருடைய பெற்றோர் தயக்கத்துடன் ஏற்றுக்கொண்டனர்.

தன் ஜீவனையும், தனக்கு அன்பானவர்களைவிட கிறிஸ்துவை நேசித்ததால் கர்த்தருடைய வார்த்தை அவருக்கு ஆறுதலாக இருந்தது. பம்பாயின் தெருக்களில் கிறிஸ்துவைக் குறித்து பிரசிங்கிக்கத் தொடங்கினார். சில நாட்களிலே பெரிய கூட்டத்தைத் தலைமை தாங்கி பேசும் அளவிற்கு தேவன் அவரை உயர்த்தினார். ஒவ்வொரு மாதம் 400-க்கும் அதிகமான இடங்களுக்குச் சென்று சுவிசேஷத்தை அறிவித்தார். அவரது ஊழியத்தின் பலனாக ஆயிரக்கணக்கானவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

சென்னையில் தனது ஊழியத்தை ஆரம்பித்து “யெஹோவா ஷம்மா” என்ற சபையை 1941-ம் ஆண்டு தொடங்கினார். இந்த சபையின் மூலமாக இந்தியாவின் பல பாகங்களிலும், பாகிஸ்தான், இலங்கை, ஆஸ்திரேலியா மற்றும் பல நாடுகளில் சபைகள் உருவாகின. ஆண்டவர் அவரை அற்புதமாகப் பயன்படுத்தினார்.

தெற்காசியாவில் ஒரு கிறிஸ்தவ சுவிசேஷகராகத் தனது பணியை ஆரம்பித்து இந்திய சர்ச் இயக்கம் என்ற ஸ்தாபனத்தை நடத்தி வந்தார். பல இடங்களில் தேவாலயங்களை நிறுவி உலகளாவிய பூர்வீக தேவாலய நடவு என்ற இயக்கத்தைத் தொடங்கினார்.

21-ம் நூற்றாண்டின் எலியா என்றும் அழைக்கப்படுகிறார். தினமும் வேதவாசிப்பு, ஜெபம், ஆழ்ந்த விசுவாசம் இவரது வெற்றிக்கு காரணமாயின. விசுவாசிகளுக்கு மத்தியில் ஐக்கியத்தை நிலைப்படுத்த அன்பின் விருந்தை ஆரம்பித்தார். ஓர் அன்பின் ஊழியராக வாழ்ந்து 2000-ம் ஆண்டு செப்டம்பர் 17-ம் நாள் தன் ஓட்டத்தை முடித்தார்.

R.ஜெபர்சன்

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஜூலை 2020

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 03-07-2020 | உக்கிராணத்துவம் பொறுப்புள்ள வள மேலாண்மை | யாத்தி. 18:13-27 | 2 கொரிந். 8:1-8 | மத்தேயு 25:14-30 | 147:1-11 |
| 10-07-2020 | இறையியல் கல்வி இறைமக்களை தயார் செய்தல் | உபாகமம் 6:1-12 | எபேசியர் 4:11-16 | மத்தேயு 7:24-29 | 119:89-104 |
| 17-07-2020 | இறைமக்கள் கிறிஸ்துவின் தூதர்கள் | யோசுவா 1:1-9 | 2 கொரிந். 5:14-21 | மாற்கு 6:7-13 | 18:20-30 |
| 24-07-2020 | அருட்பொழிவின் திருப்பணி | எசேக். 33:1-9 | 1 தீமோத். 3:1-13 | யோவான் 21:15-19 | 99 |
| 31-07-2020 | நன்றி வழிபாடு | யோவான் 11:17-27 | - | லூக்கா 10:38-42 | 41 |

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

(1 சாமுவேல் 16-31)

கீழ்கண்ட வினாக்களுக்கு 1 சாமுவேல் 16-31 அதிகாரங்களிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. தாவீது பெலிஸ்தரின் நாட்டில் குடியிருந்த நாட்கள் எத்தனை?
2. “அதைப் பின்தொடர், அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்” வசனக்குறிப்பு தருக.
3. தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தவன் யார்?
4. யாருடைய இருதயம் மிகவும் தத்தளித்துக்கொண்டிருந்தது?
5. அந்நாள் முதற்கொண்டு கர்த்தருடைய ஆவியானவர் யார்மீது வந்து இறங்கியிருந்தார்?
6. அப்பொழுது ................ நான் .............., என் ................ தாவீதே, திரும்பி வா, என் .................. இன்றைய தினம் உன் ................ அருமையாயிருந்தபடியால், இனி ............ ஒரு .............. இதோ, நான் .................. மகா பெரிய ................ என்றான். நிரப்புக.
7. யார், யாருடைய முகத்துக்கு முன்பாக பயந்து விலகி ஓடிப்போனார்கள்?
8. யாருக்கு “அந்த” வார்த்தை விசனமாயிருந்தது?
9. மிகவும் நெருக்கப்பட்ட வேளையில் தாவீது செய்த ஒரே ஒரு காரியம் என்ன?
10. சவுலின் ஊழியக்காரன் தாவீதினிடத்தில் கண்ட ஆறு காரியங்களைக் குறிப்பிடுக.

Bro.I.சைமன்,
சபை ஊழியர்.

## June 2020 வேதவினா போட்டிக்கான சரியான பதில்கள்

1. ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரமம் 1 சாமு. 3:14
2. "விண்ணப்பம்" 1 சாமு. 1:10,12,16,17,26,27
3. சாமுவேல் தீர்க்கதரிசி - சவுலைப்பார்த்து 1 சாமு. 9:26-27
   சவுலுக்கு 1 சாமு. 9:26-10:9
